**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
0413-2339099
e-mail: cm.pon@nic.in

No.1959/CM/Mssg/2018/49

Date : 05.11.2018

# தீபாவளித் திருநாள் வாழ்த்துச் செய்தி

தீப ஒளித் திருநாளான தீபாவளி அனைவரும் கொண்டாடி மகிழும் அற்புதமான திருநாளாகும். பெரியவர்கள் முதல் சிறியவர்கள்வரை அனைவரும் மகிழ்ச்சியோடு புத்தாடையுடுத்தி, இனிப்புகளோடு கொண்டாடும் திருநாள் தீபாவளியாகும். நம் முன்னோர்கள் குடும்ப ஒற்றுமையைப் பேணவும், உற்றார், உறவினர், அக்கம்பக்கத்தினர் ஆகியோருடன் நல்லுறவைப்பேணவும் விழாக்களையும் பண்டிகைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். அதற்கேற்றாற்போல் நாமும், நம்குடும்ப உறவுகள், உறவினர், நண்பர்கள் என அனைத்துத் தரப்பினரிடமும், பகை மறந்து, கருத்துவேறுபாடுகள் கடந்து, இந்தத் திருநாளை அவர்களோடு இணைந்து மகிழ்ச்சியோடு கொண்டாடிவருகிறோம். அதேபோல், வறியவர்களும், ஏழைக்குழந்தைகளும், சேவை இல்லங்களில் உள்ளவர்களும் இந்தத் திருநாளை இனிமையாகக் கொண்டாட நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து அவர்களை மகிழ்வித்து நாமும் பெருமைபெறலாம்.

உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என் தலைமையிலான புதுச்சேரி அரசு நம் மாநில மக்கள் இந்த தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட, **மாநில வரலாற்றிலேயே முதல்முறையாக** அனைத்து சிவப்பு நிற குடும்ப அட்டைதாரர்களுக்கு **ரூ.1,000/-** மற்றும் அனைத்து மஞ்சள் நிற குடும்ப அட்டைதாரர்களுக்கு **ரூ.675/- பணமாக வழங்கி** உங்களின் மகிழ்ச்சியில் பங்கெடுத்து, உங்களோடு இணைந்து இந்த தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகிறது என்பதை இந்தத் தருணத்தில் மகிழ்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வே. நாராயணசாமி

....2/-